தேசிய ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டுக்கான அலுவலகமானது 2024 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலம் நிறுவப்பட்ட ஒரு நிறுவனமாகும். மேற்படி அலுவலகத்தில் பின்வரும் பதவிகளுக்குத் தகைமைவாய்ந்த நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

## பணிப்பாளர் சபைச் செயலாளர் — பதவிகளின்: 01

சேவைப் பிரிவு : **MM 1-1**

## பதவியின் தன்மை

- தவிசாளர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரியுடன் கலந்தாலோசித்து பணிப்பாளர் சபை கூட்டங்களைத் திட்டமிடுதல் மற்றும் ஒருங்கிணைத்தல், நிகழ்ச்சி நிரல்களைத் தயாரித்தல், சபை ஆவணங்கள் குறித்த காலத்திற்குள் விநியோகிக்கப்படுவதை உறுதிசெய்தல், கூட்டங்களில் கலந்துகொண்டு அறிக்கைகள் மற்றும் தீர்மானங்களைச் சரியாகப் பதிவுசெய்தல் உள்ளடங்கலாக, பணிப்பாளர் சபைக்கு தொழில்முறைச் செயலாளர் மற்றும் ஆளுகை (Governance) ஒத்துழைப்பை வழங்குதல்.

- அரசாங்கக் கொள்கைகள், திறைசேரி பணிப்புரைகளினால் வெளியிடப்பட்டுள்ள நிறுவன ஆளுகை வழிகாட்டல்களுக்கு அமைய பணிப்பாளர் சபை செயற்படுவதை உறுதிசெய்தல்.

- அனைத்து நியதிச்சட்ட ஆவணங்கள், சபைக் கூட்ட அறிக்கைகள், தீர்மானங்கள், இரகசிய ஆவணங்கள் மற்றும் ஏனைய நிறுவன அறிக்கைகளைச் சரியாகப் பேணுதல், பாதுகாப்பாக தம்வசம் வைத்திருத்தல், இரகசியத்தன்மையைப் பாதுகாத்தல் மற்றும் அதிகாரமளிக்கப்பட்ட பரிசோதனைகள் மற்றும்

கணக்காய்வுகளுக்குத் தேவைப்படும்போது வழங்கக்கூடியவாறு ஆவணப்படுத்தல்.

- சபைத் தீர்மானப் பதிவேட்டைப் பேணுதல், ஏற்றுக்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் முகாமைத்துவத்துடன் இணைந்து பின்னாய்வை மேற்கொள்ளல், முன்னேற்றத்தைப் பணிப்பாளர் சபைக்கு அறிக்கையிடுதல் மற்றும் நிறுவன ஆளுகை நடவடிக்கைகள் தொடர்பில் பணிப்பாளர் சபை, முகாமைத்துவம், விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சு, திறைசேரி மற்றும் ஏனைய தொடர்புடைய தரப்பினருக்கிடையில் வினைத்திறனான தொடர்பாடல் மற்றும் ஒருங்கிணைப்பை இலகுபடுத்துதல்.
- பணிப்பாளர் சபையினால் ஒப்படைக்கப்படும் ஏனைய கடமைகள் தொடர்பான கடித ஆவணங்களைத் தயாரிக்கும் பணி.

---

## தகைமைகள் (கீழ்வரும் 1 அல்லது 2)

1. உயர்நீதிமன்ற சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்திருத்தல்

   மற்றும்

   உயர்நீதிமன்ற சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்ததன் பின்னர் பதவிக்குரிய விடயத்துறையில் குறைந்தது ஒரு (01) வருட அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

2. பொது நிர்வாகம் / வியாபார முகாமைத்துவம் / சட்டம் / அல்லது பதவிக்குரிய விடயத்துறையில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

   மற்றும்

பல்கலைக்கழக பட்டத்தைப் பெற்றதன் பின்னர், பதவிக்குரிய விடயத்துறையில் குறைந்தது ஒரு (01) வருட அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

## வயதெல்லை

22 வயதுக்கு குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு ஆகக்கூடிய வயதெல்லை ஏற்படையதாகாது.

---

## சம்பள அளவுத்திட்டம்

**MM 1-1 - 2025 - ரூ. ( 91,690 - 10 x 2,480 - 15 x 3,450 - 168,240)**

(2025.03.25ஆம் திகதிய முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிருப இலக்கம் 01/2025இற்கு அமைவாக)